# பகவத் கீதை

CONNEMARA LIBRARY MADRAS
22 APR

ஆனந்தன்

ராஜேஸ்வரி புத்தக நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை-1.

பகவத் கீதை ஒரு அருட்செல்வம்; ஞானத் திறவு கோல்; எல்லா உபநிஷங்களின் சாரமும் அதில் இருக்கிறது. அதை அறிந்தவர் சிலர்; அறியாதவர் பலர். எல்லோரும் அதை அறிய வேண்டுமே என்ற சிந்தனை எழுந்தது.

இந்த முறையில் இதைத் தெரிவிக்க, எனக்குப் போதிய ஆற்றல்—அறிவு உண்டா என்ற பிரச்னை எழாமல், 'தெரிவிப்பது உன் செயல்' என என்னுள் ஏதோ ஒன்று அறிவுறுத்தியது. அது அன்பா? ஆர்வமா? இயற்கையால் தூண்டப் பெற்ற உணர்வா? அதை நான் அறியேன். 'மனத்தை அதனிடத்தே வைத்து மதியை அதனுள் செலுத்தி' இதைத் தொகுக்க முனைந்தேன். "நற்காரியங்கள் செய்யும் எவனும் கெட்ட கதி அடைவதில்லை" என்ற கீதைப் பொன்மொழி எனக்கு ஆறுதலளிக்கிறது.

**பகவத் கீதையில்** பதினெட்டு அத்தியாயங்கள் உள்ளன. மொத்தம் அறுநூற்றுத் தொண்ணூற்று ஏழு சுலோகங்கள் அமைந்துள்ளன. அவற்றிலிருந்து சிலவற்றைத் திரட்டி இச் சிறு நூல் வெளியிடப் பெறுகிறது. இந்நூலின் அளவு சிறிதெனினும் மூல நூலின் பெருமை அளவிடற்கரிது.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் மூன்றிலும் ஆழ்ந்த புலமையுடைய பேரறிஞர் ஒருவர் இதைச் சரி பார்த்து உதவினார்கள். நன்றி.

**ஆனந்தன்.**

*முதற் பதிப்பு*
*மார்ச் '56*

**விலை**
**அணா எட்டு**

*மாருதி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை-14.*

22 APR 1957
MADRAS

# பகவத் கீதை

துயரப்பட வேண்டாதார் பொருட்டுத் துயரப் படுகின்றாய்; ஞான வார்த்தைகளும் கூறுகின்றாய். இறந்தவர்களுக்காவது, இருப்பவர்களுக்காவது அறிஞர்கள் துயரப்பட மாட்டார்கள்.

○

ஆத்மாவுக்கு இந்த உடலில் எங்ஙனம் பிள்ளைப் பிராயம், இளமை, மூப்பு தோன்றுகின்றனவோ அங்ஙனமே மற்றொரு சரீரப் பிறப்பும் தோன்றுகிறது. தீரன் அதில் கலங்க மாட்டான்.

○

குளிரையும், வெப்பத்தையும், இன்பத்தையும், துன்பத்தையும் தரும் இயற்கையின் உணர்ச்சிகள் தோன்றி மறையும் இயல்புடையன. என்றும் இருப்பனவல்ல.

○

எவன் இவற்றால் துயரப்பட்டான், இன்பமும் துன்பமும் நிகரெனக் கொள்வான், அந்தத் தீரன் சாகாதிருக்கத் தகுந்தவன்.

○

இல்லாதது உண்மை ஆகாது. உள்ளது இல்லாததாகாது. உண்மை அறிவார் — இவ் விரண்டுக்கும் உள்ள வேற்றுமை உணர்வார்.

இந்த உலக முழுதிலும் பரந்து நிற்கும் பொருள் அழிவற்றது என்று அறி; இது கேடற்றது; இதனை அழித்தல் யாருக்கும் இயலாது.

○

இந்த ஆத்மாவைக் கொல்வான் என்று நினைப்பவனும், கொல்லப்படுவான் என்று எண்ணுபவனும் அறியாதவர்கள். இந்த ஆத்மா கொல்வதும் இல்லை. கொலையுண்பதும் இல்லை.

○

இந்தப் பொருள் அழிவற்றது, பிறப்பற்றது, என்றும் உள்ளது, இதனை உணர்பவன் யாரைக் கொல்வான்; கொல்விப்பது எவனை?

○

நைந்த துணிகளைக் களைந்து எறிந்துவிட்டு மனிதன் புதுத் துணிகளை அணிந்து கொள்வதுபோல, ஆத்மா நைந்த உடல்களைக் களைந்துவிட்டு புதியனவற்றில் புகுகிறது.

○

ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டமாட்டாது; தீ எரிக்காது; நீர் நனைக்காது; காற்றும் அதை உலர்த்தாது.

ஆத்மா புலன்களுக்கு எட்டாதது; சிந்தனைக்கு எட்டாதது; மாறுதல் இல்லாதது எனக் கூறப்படுவது. எனவே, ஆத்மாவை இங்ஙனம் அறிந்து துன்பத்தை அகற்று.

○

உயிர்களின் ஆரம்பம் தெளிவில்லை; மத்திய நிலைமை தெளிவுடையது; இவற்றின் இறுதியும் தெளிவில்லை. இதில் துயரப்படுவது ஏன்?

○

இந்த ஆத்மாவை, வியப்பென ஒருவன் காண்கிறான், வியப்பென ஒருவன் சொல்லுகிறான். வியப்பென ஒருவன் கேட்கிறான். எனினும், இதனை அறிவோன் எவனுமில்லை.

○

புகழ் பெற்றவன் பின்னர் அடையும் அபகீர்த்தி மரணத்திலும் கொடிதல்லவா?

○

உறுதியுடைய புத்தி இவ்வுலகத்தில் ஒருமையுடையது. உறுதியில்லாதவர்களின் புத்தி பல கிளைகளுடையது; முடிவற்றது.

தொழில் புரியத்தான் உனக்கு அதிகாரம் உண்டு. அதன் பயன்களில் எப்பொழுதும் உரிமை பாராட்டாதே; செய்கையின் பயனைக் கருதாதே; தொழில் புரியாமலும் இருக்காதே.

○

யோகத்தில் நின்று, பற்றை நீக்கி, வெற்றி தோல்விகளை நிகரெனக் கொண்டு தொழில்களைச் செய்க. நடுநிலையே யோகம் எனப்படும்.

○

சம புத்தியோடு தொழில் புரிவதைவிட, ஆசையோடு தொழில் புரிவது மிகவும் கீழானது. சமபுத்தியில் சரணடைக. பயன் கருதுவோர் கீழானவர்கள்.

○

சமபுத்தி யுடையவன் இம்மையில் நன்மை தீமை இரண்டையும் துறக்கிறான். ஆகையால் நீ யோகத்தில் சார்ந்திடு. யோகம் தொழில்களில் திறமையாகும்.

○

புத்தியுடைய ஞானிகள் செய்கையில் விளையும் பயனைத் துறந்து, பிறவித் தளை நீங்கி, துன்பமற்ற நிலையை நிச்சயம் அடைகிறார்கள்.

உன்னுடைய புத்தி மோகக் குழப்பத்தை கடந்து செல்லுமானால், அப்போது, கேட்க வேண்டியதிலும், கேட்டதிலும் உனக்கு வேதனை ஏற்படாது.

○

ஒருவன் தன் மனத்தில் எழும் ஆசைகள் அனைத்தையும் அகற்றி, தன்னிலே ஆத்ம திருப்தி அடைவானாயின், அப்போது ஸ்திரபுத்தி யுடையவன் என்று சொல்லப்படுகிறான்.

○

துன்பத்தில் மனம் கெடாது, இன்பத்திலே ஆவலற்று, பயத்தையும் கோபத்தையும் நீக்கியவன் முனி என்றும், உறுதியான அறிவுடையவன் என்றும் சொல்லப்படுகிறான்.

○

எவன், நன்மை தீமை வருமிடத்தே எதனிலும் வீழ்ச்சி யற்றவனாய் விருப்பு வெறுப்பின்றி யிருப்பானோ அவனுடைய அறிவு உறுதி பெற்றது.

○

ஆமை தன் அவயவங்களை இழுத்துக் கொள்வது போல, பொருள்களிடத்திலிருந்து புலன்களை மீட்கும் திறமை யுடையவன் அறிவு நிலையானது.

புலனடக்கம் பெற்றவனுக்கு விஷயானுபவமில்லை. ஆனால் ஆசை உண்டு. பரம்பொருளைத் தரிசித்த பின் அந்த ஆசையும் அழிந்துவிடும்.

○

தவ முயற்சியுடைய நல்லறிஞனுடைய மனத்தையும்கூட, பொல்லாத இந்திரியங்கள் பலவந்தமாக இழுத்துச் செல்கின்றன.

○

மனிதன் விஷயங்களை நினைக்கும்போது அவற்றிலே பற்று உண்டாகிறது. பற்றுதலால் ஆசை எழுகிறது. ஆசையால் சினம் பிறக்கிறது.

○

சினத்தால் மயக்கம்; மயக்கத்தால் நினைவு தவறுதல்; நினைவு தவறுதலால் புத்தி நாசம்; புத்தி நாசத்தால் மனிதன் அழிகிறான்.

○

விருப்பு, வெறுப்பு இல்லாமல் தனக்கு வசப்பட்ட புலன்களுடன் விஷயங்களில் சஞ்சரிக்கின்ற மனக் கட்டுப்பாடுடைய மனிதன் மனத் தெளிவை அடைகிறான்.

சாந்தி நிலையில் மனிதனுக்கு எல்லாத் துன்பங்களும் அழிகின்றன. மனம் அமைதியுடைய ஒருவனுக்கே புத்தி விரைவிலே நிலைப்படுகிறது.

○

யோக மில்லாதவனுக்குப் புத்தி இல்லை. யோக மில்லாதவனுக்கு மனோபாவனை இல்லை. மனோபாவனை இல்லாதவனுக்குச் சாந்தி இல்லை. சாந்தி இல்லாதவனுக்கு இன்பம் ஏது?

○

இந்திரியங்கள் சலிக்கையில் ஒருவனுடைய மனமும் அவற்றைப் பின்பற்றிச் செல்லுமாயின் அந்த மனம், கடலில் தோணியைக் காற்று மோதுவதுபோல் அறிவை மோதுகிறது.

○

இச்சை யற்று, எல்லா இன்பங்களையும் துறந்து, 'யான்—எனது' என்பவற்றை அகற்றியவனே சாந்தி நிலை அடைகிறான்.

○

தொழில்களைத் தொடங்காமல் இருப்பதனால் மனிதன் செயலற்ற நிலை அடைவதில்லை; வெறும் சந்நியாசத்தால் மனிதன் ஈடேற்றம் பெற்றுவிட மாட்டான்.



2

யாரும் ஒரு கணப்பொழுதேனும் செயலாற்றுமல் இருப்பதில்லை. ஏனெனில், இயற்கையில் உதித்த குணங்களே, எல்லா உயிர்களையும் தன்னையறியாமல் செயலாற்றச் செய்கின்றன.

○

கர்மேந்திரியங்களை அடக்கிக்கொண்டு, ஆனால் இந்திரிய விஷயங்களை மனத்தால் எண்ணிக்கொண்டிருக்கும் மூடன், பொய் ஒழுக்கம் உடையவன் என்று சொல்லப்படுகிறான்.

○

இந்திரியங்களை மனத்தால் கட்டுப்படுத்தி பற்றற்று, கர்மேந்திரியங்களால் கர்ம யோகம் செய்பவன் சிறந்தவன்.

○

நித்திய தொழிலை நீ செய். தொழில் செய்யாமல் இருப்பதை விட தொழில் சிறந்தது. தொழில் இல்லாதவனுக்கு உடலைப் பேணுதல்கூட இயலாது.

○

ஆத்மாவில் இன்புற்று, ஆத்மாவில் திருப்தியடைந்து, ஆத்மாவில் மகிழ்ந்திருப்பவனுக்குத் தொழில் புரியும் கடமை இல்லை.

அவனுக்குச் செய்கையில் யாதொரு பயனுமில்லை; செயலின்றி இருப்பதிலும் அவனுக்குப் பயனில்லை. எவ்விதப் பயனையும் கருதி அவன் எந்த உயிரையும் சார்ந்து நிற்பதில்லை.

○

ஆதலால், எப்போதும் பற்றற்று செய்யத்தக்க தொழிலைச் செய்துகொண்டிரு. பற்றில்லாமல் தொழில் செய்துகொண்டிருக்கும் மனிதன் பரம்பொருளை எய்துகிறான்.

○

சிறந்தவன் எதைச் செய்கிறானோ, அதையே மற்ற மனிதர் பின்பற்றுகிறார்கள்; அவன் எதைப் பிரமாண மாக்குகிறானோ அதையே உலகத்தார் தொடருகிறார்கள்.

○

அறிவில்லாதார் பற்றுக்கொண்டு எப்படித் தொழில் புரிகிறார்களோ, அப்படியே, அறிவுடையோன் பற்றை நீக்கி உலக நன்மையைக் கருதித் தொழில் செய்ய வேண்டும்.

○

எங்கும் தொழில்கள் இயற்கையின் குணங்களால் செய்யப்படுகின்றன. அகங்காரத்தில் மயங்கியவன் "நான் செய்கிறேன்" என்று எண்ணுகிறான்.

இயற்கையின் குணங்களால்மயங்கியவர்கள்; குணங்களிலும், தொழில்களிலும் பற்றுதல் அடைகிறார்கள். சிற்றறிவுடைய அந்த மந்த புத்தியினரை, தெளிந்த அறிவுடையோர் கலங்கும்படி செய்யக்கூடாது.

○

ஞானியும் தன் இயல்புக்கு ஏற்றபடி நடக்கிறான். உயிர்களும் தன் இயல்பைப் பின்பற்றுகின்றன. தடை செய்வதில் பயன் என்ன?

○

இந்திரியங்களுக்கு விஷயங்களில் விருப்பு வெறுப்பு உண்டு. அவற்றிற்கு வசப்படலாகாது. அவைகளே அவனுக்குச் சத்ருருக்கள்.

○

நல்லாரைக் காப்பதற்கும், துஷ்டரை ஒழிப்பதற்கும் தர்மத்தை நிலைநிறுத்துவதற்கும் யுகந்தோறும் நான் பிறக்கிறேன்.

○

யார் என்னை எப்படி வழிபடுகிறார்களோ, அவர்களை நான் அப்படியே சார்கிறேன்.

'எது தொழில், எது தொழிலல்லாதது' என்ற விஷயத்தில் ஞானிகளே தடுமாறுகிறார்கள். ஆதலால் தொழிலின் இயல்பை உணர்த்துகிறேன். அதை அறிவதனால் தீங்கினின்று விடுபடுவாய்.

○

தொழிலின் இயல்பும் தெரியவேண்டும்; தொழிற் கேட்டின் இயல்பும் தெரியவேண்டும். தொழி லின்மையின் இயல்பும் தெரிய வேண்டும். தொழிலின் போக்கு அறிதற்கரியது.

○

செய்கையில் செயலின்மையையும், செயலின்மையில் செய்கையையும் காண்போன் மனிதரில் அறிவுடை யோன்; அவன் எத்தொழில் செய்கையிலும் யோகத்தில் இருப்பான்.

○

எவனுடைய செய்கைத் தொடக்கங்கள் எல்லாம் விருப்ப நினைவு தவிர்ந்தனவோ, அவனுடைய செயல்கள் ஞானத் தீயால் எரிக்கப்பட்டனவாம். அவனை, அறிவுடை யோன் என்கிறார்கள் ஞானிகள்.

○

தொழிற்பயனிலே பற்று அற்றவனாய், எப்போதும் திருப்தியுடையோனாய், எதனினும் சார்பற்று நிற்போன், செய்கையில் ஈடுபட்டிருந்தாலும் செயலற்றவனாவான்.

ஆசையற்றவன், மனத்தையும் உடலையும் கட்டுப் படுத்தியவன், உடைமைகளைத் துறந்தவன், வெறும் சரீரத்தால் மாத்திரம் தொழில்செய்துகொண்டிருப்பவன் பாவத்தை அடையமாட்டான்.

○

தானாக வந்தெய்தும் லாபத்தில் சந்தோஷம் அடை-பவன், நன்மை தீமைகளைக் கடந்து, பொறாமை யற்ற வனாய், வெற்றியிலும் தோல்வியிலும் சமநிலை பெற் றோன் தொழில் செய்தாலும் அதனால் கட்டுப்படுவதில்லை.

○

பற்றுதல் அகன்றவன், விடுதலை கொண்டவன், ஞானத்தில் மனத்தை உறுதிப்படுத்தியவன், வேள்வி யெனக் கருதித் தொழில் புரியும் அவனுடைய கர்ம மெல்லாம் தானே கரைந்து போகிறது.

○

சிலர் திரவியத்தால் யாகம் செய்வார்கள்; சிலர் கல்வியால் செய்வார்கள்; சிலர் ஞானத்தால் செய்வார்கள்.

○

திரவியத்தைக் கொண்டு செய்யப்படும் யாகத்தைக் காட்டிலும் ஞானத்தினால் செய்யப்படும் யாகம் சிறந்தது. கர்மம் முழுதும் ஞானத்தில் முடிவு பெறுகிறது.

பாவிகள் எல்லாரைக் காட்டிலும் நீ பெரும் பாவியாக இருந்தாலும், அந்தப் பாபத்தை ஞானத் தோணியால் கடந்து செல்வாய்.

○

ஞானத்தைப்போல் தூய்மை தரும் பொருள் இவ்வுலகத்தில் வேறெதுவுமில்லை. யோகத்தில் நல்ல சித்தி அடைந்தவன் தானாகவே தக்க பருவத்தில் அதைத் தனக்குள் கிடைக்கப் பெறுகிறான்.

○

அறிவும் சிரத்தையுமின்றி ஐயத்தை இயல்பாகக் கொண்டவன் அழிந்து போகிறான். ஐயமுடையோனுக்கு இவ்வுலகுமில்லை; மேலுலகுமில்லை; இன்பமுமில்லை.

○

மோகத்தால் செய்கைகளைத் துறந்து, ஞானத்தால் ஐயத்தை அகற்றி, தன்னைத்தான் ஆள்வோனைக் கர்மங்கள் கட்டுப்படுத்தாது.

○

அஞ்ஞானத்தால் தோன்றி நெஞ்சில் நிலைகொண்டிருக்கும் இந்த ஐயத்தை, உன் ஞான வாளால் அறுத்து, யோக நிலை கொள்ள கர்மத்துறவு, கர்மயோகம் ஆகிய இரண்டும் சிறந்தது. எனினும் இவற்றுள் கர்மத் துறவைக் காட்டிலும் கர்மயோகம் மேலானது.

கர்மத்துறவு, கர்மயோகம் ஆகிய இரண்டும் சிறந்தது. எனினும் இவற்றுள் கர்மத்துறவைக் காட்டிலும் கர்மயோகம் மேலானது.

O

விருப்பு, வெறுப்பு இல்லாதவன் நித்திய சந்நியாஸி எனப்படுகிறான். நன்மை தீமை நீங்கிய அவன் எளிதில் பந்தத்திலிருந்து விடுபடுகிறான்.

O

கர்மயோகத்தைக் கடைபிடிப்பவன், மனம் தெளிந்தவன், உடலை வென்றவன், இந்திரியங்களை அடக்கியவன், தன்னுடைய ஆத்மாவே எல்லா உயிர்களுக்கும் ஆத்மா எனக் காண்கிறவன்—அவன் தொழில் செய்து கொண்டிருப்பினும் அதில் ஒட்டுவதில்லை.

O

உண்மையறிந்த யோகி, பார்க்கினும், கேட்கினும், தீண்டினும், மோப்பினும், அருந்தினும், நடக்கினும், உறங்கினும், சுவாசிக்கினும், பேசினும், கண் திறக்கினும், மூடினும் பொறிகள் புலன்களில் போகின்றன என்று உறுதிகொண்டு " நான் ஒன்றையும் செய்கிறேனில்லை " என்று நினைப்பான்.

செய்கைகளை எல்லாம் பிரம்மத்தில் சார்த்திவிட்டுப் பற்றுதலை நீக்கி எவன் தொழில் செய்கிறானோ, அவன் நீரில் தாமரை இலைபோன்று பாபத்தில் பந்தப் படுவதில்லை.

○

யோகிகள் பற்றுதலைக் களைந்து ஆத்ம சுத்தியின் பொருட்டாக உடம்பாலும், மனத்தாலும், புத்தியாலும், இந்திரியங்களாலும் தொழில் செய்வார்கள்.

○

யோகி, கர்மப் பயனைத் துறந்து நிஷ்டையினின்று உதிக்கும் சாந்தியைப் பெறுகிறான். யோகம் செய்யாதவன் ஆசை வயப்பட்டு, பலனில் பற்று வைத்து பந்தப்படுகிறான்.

○

செய்கைத் தலைமை, செய்கை, செய்கைப் பயன் பெறுதல் இவற்றுள் எதனையும் கடவுள் மனிதனுக்குத் தரவில்லை. இயற்கையே இங்ஙனம் செய்கிறது.

○

யாருடைய பாப புண்ணியத்தையும் கடவுள் பொருள் படுத்துவதில்லை. ஞானம் அஞ்ஞானத்தால் சூழப்பட்டிருக்கிறது. ஆதலால் உயிர்கள் மயக்கம் அடைகின்றன.

யாருடைய அஞ்ஞானம் ஆத்மஞானத்தால்அழிக்கப் படுகிறதோ, அவர்களுக்கு அந்த ஞானம் சூர்யனைப் போன்று பரம்பொருளை விளக்குகிறது.

O

பிரம்மத்தில் புத்தியை நிறுத்தியவர், அதுவே தாமாகி, அதிலே உறுதியாயிருப்பவர், அதையே புகலிட மாகக் கொண்டவர், ஞானத்தால் பாபங்களைப் போக் கடித்துக்கொண்டவர் பின்பும் பிறப்பதில்லை.

O

மனத்தை சமநிலையில் உறுதிப்படுத்தியவர்களால், இவ்வுலகத்திலேயே இயற்கையை வெல்லப்படுகிறது.

O

பிரம்மஞானி, பிரம்மத்தில் நிலைபெற்றவன், உறுதி யான அறிவையுடையவன், தெளிந்த மனம் உடையவன், விரும்பிய பொருளைப் பெறும்போது இன்பம் அடைவதுமில்லை ; விருப்பமில்லாததைப் பெறும்போது துயரப்படுவதுமில்லை.

O

வெளி விஷயங்களில் மனப்பற்று இல்லாதவன் தனக்குள்ளே அந்த இன்பத்தைக் காண்பான். பிரம்ம யோகத்தில் பொருந்தி அழியாத இன்பத்தை அடைகிறான்.

இந்திரிய விஷயங்களில் தோன்றிய இன்பங்களே துன்பத்துக்குக் காரணங்களாகும். அவை முதலும் முடிவும் அற்றன. அறிவுடையோன் அவற்றில் இன்ப முறுவதில்லை.

O

சரீரம் நீங்கு முன்னர் இவ்வுலகில் விருப்பத்தாலும், சினத்தாலும் விளையும் வேகத்தை பொறுக்க வல்லவனே யோகி, அவனே இன்பம் அடைபவன்.

O

நன்மை தீமைகளைப் போக்கி, ஐயம் அகற்றி, இந்திரியங்களை அடக்கி, எல்லா உயிர்களின் நன்மையில் மகிழ்ச்சியுறும் ரிஷிகள் பேரானந்த நிலை அடைகிறார்கள்.

O

செய்கையின் பயனில் சார்பின்றி, செய்யத் தகுந்ததைச் செய்வோன் துறவி ; அவனே யோகி.

O

எதனை சந்நியாசம் என்கிறார்களோ, அதுவே யோகம் என்றறிக. ஏனெனில் தன் கோட்பாடுகளைத் துறக்காதவன் யோகியாவதில்லை.

யோக நிலையில் ஏற விரும்பும் யோகிக்கு தொழிலே உபாயமாகிறது.

○

ஒருவன் எப்பொழுது விஷயங்களில் பற்றற்று, கருமத்தில் கருத்து வைக்காது எண்ணங்களை விட்டொழிக்கிருனே, அப்பொழுதுதான் அவன் 'யோக நிலையில் ஏறியவன்' என்று சொல்லப்படுகிருன்.

○

தன்னுடைய ஆத்மாவைக்கொண்டு ஆத்மாவை இழிவுறுத்தல் ஆகாது. ஏனெனில் தானே தனக்கு நண்பன் ; தானே தனக்குப் பகைவன்.

○

தன்னைத் தான் வென்றவனுக்குத் தானே உறவினன். ஆனல் தன்னைத் தான் வெல்லாதவன் தனக்கே பகைவன்போல் கேடு சூழ்கிருன்.

○

தன்னை வென்று ஆறுதல் எய்தியவனுக்கு சீதோஷ்ணங்களிலும், சுகதுக்கங்களிலும், மான அவமானங்களிலும் பரமாத்ம தரிசனம் விளங்குகிறது.

ஞான விஞ்ஞானத்தில் திருப்தி பெற்றவன், மனம் சலியாதவன். புலன்களை வென்றவன், மண், கல், பொன் இவற்றைச் சமமாக கருதுகின்றவன் யோகத்தில் உறுதி பெற்ற யோகி எனப்படுகிறான்.

○

நல்ல எண்ணம் உடையவர், நண்பர், பகைவர், உதாசீனர், மத்யஸ்தர், வெறுப்புக்குரியவர், உறவினர், சத்புருஷர் பாபி ஆகியவர்களிடத்தில் சமபுத்தி யுடையவனே மேலானவன்.

○

யோகியானவன் யாருக்கும் தென்படாமல், தனியாக இருந்துகொண்டு உள்ளத்தையும் உடலையும் அடக்கி, ஆசை அகற்றி, தனக்கென பொருள் கொள்ளாதவனாய் எப்பொழுதும் மனத்தை ஒடுக்க வேண்டும்.

○

அளவு கடந்து உண்பவனுக்கு யோகமில்லை. அறவே உண்ணாதவனுக்கும் யோகம் கூடுவதில்லை. அதிக தூக்கம் கொண்டவனுக்கும், அதிகமாக விழித்திருப்ப வனுக்கும் யோகம் இல்லை.

○

துணிந்த புத்தியினால் மனத்தை ஆத்மாவில் நிறுத்தி சிறிது சிறிதாக ஆறுதல் அடைக. வேறு எதையும் சிந்திக்கலாகாது.

எங்கெங்கே மனம் சஞ்சலமாய், உறுதியின்றி உழல்கிறதோ, அங்கங்கே அதைக் கட்டுப்படுத்தி ஆத்மாவின் வசத்திலே கொண்டு வருக.

○

மனம் சாந்தமாய், ரஜோகுணம் தணிந்து, மாசு நீங்கிய பிரம்மமேயான இந்த யோகிக்கு சிறந்த இன்பம் கிடைக்கிறது.

○

எவன், எங்கும் என்னைக் காண்கிறானோ, எல்லாப் பொருள்களையும் என்னிடத்தில் காண்கிறானோ, அவனுக்கு நான் மறைவதில்லை ; எனக்கு அவனும் மறைவதில்லை.

○

இன்பமாயினும், துன்பமாயினும் எதிலும் சம பார்வையுடையவன் பரமயோகி எனக் கருதப்படுகிறான்.

○

மனம் கட்டுப்படாததுதான் ; சலனம் உடையதுதான் ; ஐயமில்லை. எனினும் அதைப் பழக்கத்தாலும், வைராக்கியத்தாலும் அடக்கி விடலாம்.

மனத்தைக் கட்டுப்படுத்தாதவன் யோகம் அடையான் என்பது என் கருத்து. மனத்தை அடக்கியவன் உபாயத்தால் முயற்சி செய்கிறதனால் அதை அடைய இயலும்.

O

நற்காரியங்கள் செய்யும் எவனும் கெட்ட கதி அடைவதில்லை.

O

ஆயிரக்கணக்கான மனிதருள் யாரோ ஒருவன் மன நிறைவுக்காக (சித்தியடைய) முயல்கிறான்; முயற்சியுடைய (நல்லியல்புடைய)வர்கள் பலரில் யாரோ ஒருவன் என்னை அறிகிறான்.

O

துன்புற்றவன், ஞான வேட்கையுடையவன், பொருள் இன்பம் தேடுபவன், ஞானி ஆகிய நான்கு விதமான நன்மக்கள் என்னைப் போற்றுகின்றார்கள்.

O

அவர்களில் நித்திய யோகம் பூண்டு மாறாத பக்தி செய்யும் ஞானி மேலானவன். ஞானிக்கு நான் மிகப் பிரியமானவன். எனக்கு அவனும் பிரியமானவன்.

எந்த எந்த பக்தன், நம்பிக்கையுடன் எந்த எந்த வடிவத்தைச் சிரத்தையோடு வழிபட விரும்புகிறானோ அவனுடைய அசையாத நம்பிக்கைக்கு ஏற்ற வடிவத்தை நான் மேற்கொள்ளுகிறேன்.

○

அழிவற்றதும் சிறந்ததுமானது பிரம்மம். அதன் இயல்பை அறிவது ஆத்ம ஞானம் எனப்படும். உயிர்களை விளைவிக்கும் இயற்கை, கர்மம்எனப்படுகிறது.

○

மனத்தை என்னிடத்தே வைத்து, மதியை என்னுள் செலுத்து. பின்பு நீ என்னுள் உறைவாய்; ஐயமில்லை.

○

என்னிடத்தில் உறுதியாக உன் மனத்தைச்செலுத்த இயலாவிடில் பழகிப்பழகி என்னை அடைய விரும்பு.

○

பழகுவதிலும் நீ திறமையற்றவனாயின், என் பொருட்டுத் தொழில் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டிரு. என் பொருட்டுத் தொழில்கள் செய்வதாலும் சித்தி பெறுவாய்.

பழக்கத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்தது. ஞானத்தைக் காட்டிலும் தியானம் சிறந்தது; தியானத்தைக் காட்டிலும் செய்கைப் பயன்களை தியாகம் செய்வது சிறந்தது. தியாகத்தினின்றும் விரைவில் சாந்தி உண்டாகிறது.

○

எவ்வுயிரிடத்திலும் வெறுப்பின்றி நட்பும் கருணையும் கொண்டு, 'நான்—எனது' என்பது நீங்கி, இன்பத்தையும் துன்பத்தையும் நிகராகக் கொண்டு, பொறுமையாய், எப்போதும் மகிழ்ச்சியோடு, தன்னடக்கம் பெற்று, திட உறுதி கொண்டு, என்னிடத்தில் மனத்தையும் மதியையும் சமர்ப்பித்து, யார் என் பக்தனுகிருனே அவன் எனக்குப் பிரியமானவன்.

○

புகழையும் இகழையும் நிகராகக் கொண்ட மௌனி, கிடைத்ததில் திருப்தி அடைபவன், இருக்க இடம் தேடாதவன், ஸ்திரபுத்தி உள்ளவன் இத்தகைய பக்தன் எனக்குப் பிரியமானவன்.

○

ஸத்வம், ரஜஸ், தமஸ் இந்தக்குணங்கள் பிரகிருதியில் எழுவன. இவை உடம்பில் அழிவற்ற ஆத்மாவை பிணிக்கின்றன.

அவற்றுள் சத்துவ குணமானது, நிர்மலத் தன்மையால் ஒளி பொருந்தியது. தொந்தரவு உண்டு பண்ணாதது. இன்பச் சேர்க்கையாலும், ஞானச் சேர்க்கையாலும் பிணைக்கிறது.

O

ரஜோ குணமானது விருப்ப இயல்புடையது ; அவாவின் சேர்க்கையால் பிறப்பது. அது ஆத்மாவைத் தொழிற் சேர்க்கையால் கட்டுகிறது.

O

தமோ குணமானது அஞ்ஞானத்தில் பிறப்பது. எல்லா உயிர்களையும் மயங்கச் செய்கிறது. அசட்டை, சோம்பல், உறக்கம் இவற்றால் கட்டுப்படுத்துகிறது.

O

சத்துவ குணம், இன்பத்திலே சேர்க்கிறது ; ரஜோ குணம், செய்கையில் சேர்க்கிறது ; தமோ குணம், ஞானத்தை மறைத்து மயக்கத்தில் பிணிக்கிறது.

O

சத்துவ குணமானது, சில வேளை ரஜோ குணத்தையும், தமோ குணத்தையும் அடக்கி மேலெழுகிறது. ரஜோ குணமானது, சில வேளை சத்துவ குணத்தையும், தமோ குணத்தையும் அடக்கி நிற்கிறது. தமோ குணமானது, சில வேளை சத்துவ குணத்தையும், ரஜோ குணத்தையும் அடக்குகிறது.

இந்த உடம்பில் பொறிவாயில் அனைத்திலும் எப்பொழுது ஞான ஒளி உண்டாகிறதோ, அப்பொழுது சத்துவ குணம் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று அறிய வேண்டும்.

○

அவா, முயற்சி, தொழில் பெருக்கம், அமைதியின்மை, விருப்பம் இவை ரஜோ குணம் அதிகப்படும் போது உண்டாகின்றன.

○

விவேகமின்மை, முயற்சியின்மை, தவறுதல், மதி மயக்கம் இவை தமோ குணம் தோன்றுமிடத்தே விளைகின்றன.

○

சத்துவ குணத்தின் பயன் தூய்மையும் நற்செய்கையும்; ரஜோ குணத்தின் பயன் துன்பம்; தமோ குணத்தின் பயன் அறிவின்மை.

○

சத்துவ குணத்திலிருந்து ஞானம் பிறக்கிறது; ரஜோ குணத்திலிருந்து பேராசை உண்டாகிறது; தமோ குணத்திலிருந்து தவறுதல், மயக்கம், அஞ்ஞானம் தோன்றுகின்றன.

சத்துவ குணத்தில் உள்ளோர் மேலேறுகிறார்கள்; ரஜோ குணத்தோர் மத்தியில் நிற்கிறார்கள்; தமோ குணத்தோர் இழிய குணங்களும் செயல்களும் கொண்டு கீழே இறங்குகின்றனர்.

○

உடம்பிலே பிறக்கும் இம் மூன்று குணங்களையும் கடந்து, பிறப்பு, இறப்பு, மூப்பு, வருத்தம் இவற்றி லிருந்து விடுபட்டவன் மரணமிலாப் பெருவாழ்வு பெறுகிறான்.

○

தைரியம், பொறுமை, மனஉறுதி, தூய்மை, துரோகமின்மை, செருக்கின்மை ஆகிய இவை தெய்வ சம்பத்துடன் பிறந்தவனுக்கு இயல்பாகின்றன.

○

டம்பர், இறுமாப்பு, கர்வம், சினம், கடுமை, அஞ்ஞானம் இவை அசுர சம்பத்துடன் பிறந்தவனுக்கு ஏற்படுகின்றன.

○

தெய்வ சம்பத்தால் விடுதலை உண்டாகும்; அசுர சம்பத்தால் பந்தம் ஏற்படும் என்றும் கருதப்படுகிறது.

அசுரத் தன்மை கொண்டோர் செய்யத்தக்க நற் செயல்களையும், விலக்கத்தக்க தீச் செயல்களையும் அறியார். அவர்களிடம் தூய்மையும், ஒழுக்கமும், வாய்மையும் இல்லை.

○

உலகம் உண்மை இல்லாதது, தர்மநிலை இல்லாதது, கடவுள் இல்லாதது. காமத்தைக் காரணமாகக் கொண்டு ஆண் பெண் இணக்கத்தால் ஆசை அன்றி வேறு என்ன இருக்கிறது என்கின்றனர் அசுர குணத்தவர்.

○

அற்ப புத்தி யுடையவர்கள் இந்தக் கொள்கையை, பிடித்துக்கொண்டு ஆத்ம நஷ்டம் அடைந்தவர்களாய், கொடூரச் செயல் புரிபவர்களாய், உலகின் எதிரிகளாய் அதன் அழிவுக்கென்றே தோன்றியுள்ளனர்.

○

நிறைவேறாத நெடுங்காமம் பிடித்தவர்களாய், ஆடம்பரமும், தற்பெருமையும், மதமும் பொருந்தியவர்களாய், மதிமயக்கத்தால் கெட்ட எண்ணங்களைக் கைக் கொண்டு, தீய தீர்மானங்களுடன் தொழில் புரிகின்றனர்.

சாகும்வரையில் அளவு கடந்த கவலையைக் கொண்டு காம நுகர்ச்சியே எல்லாவற்றிலும் மேலானதாகக் கருதி 'உண்மையே இவ்வளவுதான்' என்ற தீர்மானம் உடையவர்களாய், நூற்றுக்கணக்கான ஆசைக் கயிறுகளால் கட்டுண்டு காமத்துக்கும், சினத்துக்கும் வசப்பட்டவர்களாய், காம போகத்துக்காக நியாயமற்ற வழியில் பொருட் குவியல்களைத் தேட முயல்கிறார்கள்.

○

ஆத்ம நாசத்துக்கு இடமான காமம், சினம், அவா ஆகிய மூன்று வாயில்களுடையது நரகம். ஆதலால் இம் மூன்றையும் விடுக.

○

இந்த மூன்று நரக வாயில்களினின்றும் விடுபட்ட மனிதன் தனக்கு நலந்தேடிக் கொள்ளுகிறான்; பின்பு பரகதி அடைகிறான்.

○

ஒவ்வொருவருடைய உள்ளியல்புக்கு ஏற்ப நம்பிக்கை அமைகிறது. மனிதன் நம்பிக்கை மயமானவன்; எவன் எந்தப் பொருளில் நம்பிக்கை யுடையவனோ அந்தப் பொருளே அவன் ஆகிறான்.

ஆயுள், அறிவு, பலம், நோயின்மை, இன்பம், ருசி இவற்றை அதிகரிக்கச் செய்வன. சுவையுடையன, பசையுள்ளன, உறுதியுடையன, இன்பந்தருவன ஆகிய உணவுகள் சத்துவ குணமுடையோருக்குப் பிரிய மானவை.

O

கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, அதிகச் சூடு, காரம், உலர்ந்தது, எரிச்சல் உடையதுமான உணவுகளை ரஜோ குணமுடையோர் விரும்புவர். இவை துன்பத்தையும் துயரத்தையும், நோயையும் விளைவிப்பன.

O

பழையது, சுவையற்றது, அழுகியது, கெட்டுப் போனது, எச்சில், அசுத்தம் இத்தகைய உணவுகளே தமோ குணத்தோருக்குப் பிரியமானவை.

O

தேவர், அந்தணர், குரவர், ஞானி இவர்களைப் போற்றுதல், தூய்மை, நேர்மை, பிரம்மசரியம், அஹிம்சை இவை சரீரத்தால் செய்யும் தவம் எனப்படும்.

O

துன்புறுத்தாததும், உண்மையுடையதும், இனியதும், நலந்தருவதுமாகிய வார்த்தை மற்றும் கல்விப் பயிற்சி இவை வாக்கு மயமான தவம் எனப்படும்.

மன அமைதி, அன்புடைமை, மௌனம், தன்னடக்கம், தூய எண்ணம் இவை மனத்தவம் எனப்படும்.

○

கொடுத்தல் கடமை எனக் கருதி, கைம்மாறு வேண்டாமல் தக்க இடத்தையும் காலத்தையும் பாத்திரத்தையும் நோக்கிச் செய்யப்படும் தானத்தை சாத்விகம் எனப்படுகிறது.

○

கைம்மாறு வேண்டியும், பயனைக் கருதியும் வருத்தத்தோடு கொடுக்கப்படும் தானத்தை ராஜஸம் எனப்படுகிறது.

○

தகாத இடத்தில், தகாத காலத்தில், தகுதியற்றவர்களுக்கு, மதிப்பின்றி இகழ்ச்சியுடன் செய்யப்படும் தானத்தை தாமஸம் எனப்படுகிறது.

○

உடல், கர்த்தா, வெவ்வேறு விதமான இந்திரியங்கள், பலவிதமாக வேறுபட்ட செயல்கள், இவற்றில் ஐந்தாவது தெய்வம்.

மனிதன் உடம்பாலும், வாக்காலும், மனத்தாலும் எந்தச் செயலைச் செய்தாலும் அது நியாயமாயினும் விபரீதமாயினும் இவ்வைந்துமே அதற்குக் காரணங்களாகும்.

○

பிரிவுபட்டு நிற்கும் எல்லா உயிர்களிலும் பிரிவற்ற அழிவற்ற ஒரே இயல்பைக் காணும் ஞானம் சாத்விகம் என்று அறிக.

○

உயிர்கள் அனைத்திலும் வெவ்வேறு வகைப்பட்ட பல இயல்புகள் இருப்பதாகப் பிரித்துக் காணும் ஞானம் ராஜஸம் என்று உணர்க.

○

காரணம் கருதாமல், ஏதேனும் ஒன்றை எல்லாமாகக் கருதிப் பற்றுதல் கொண்டு, உண்மை இயல் அறியாததும், அற்பத்தன்மை யுடையதுமான அறிவு தாமஸம் என்று கூறப்படுகிறது.

○

பயனில் விருப்பம் இல்லாதவனால், பற்றுதலின்றி, விருப்பு வெறுப்பற்று செய்யும் விதி தழுவிய செய்கை சாத்விகம் எனப்படும்.

ஆசையின் வசப்பட்டவனால் அல்லது மேலும் அகங்காரம் உடையவனால் அதிக பிரயாசையுடன் செய்யப்படும் செய்கை ராஜஸம் எனப்படும்.

○

செய்கையின் பின் விளைவையும், அதனால் பிறருக்கு நேரக் கூடிய நாசத்தையும் துன்பத்தையும், தன் திறமையையும் எண்ணாமல், அறிவின்மையால் செய்யப் படும் செய்கை தாமஸம் எனப்படும்.

○

தொழில் எது, ஒழிவு யாது, செய்யத் தக்கது எது, தகாதது யாது, அச்சம் எது, அஞ்சாமை எது, பந்தம் எது, விடுதலை யாது என்பவற்றைப் பகுத்தறியும் புத்தியே சாத்விகமானது.

○

தர்மத்தையும், அதர்மத்தையும், தகுந்த காரியத் தையும், தகாத காரியத்தையும், உள்ளபடி யறியாத புத்தி ராஜஸம் எனப்படும்.

○

அஞ்ஞான இருளால் மூடப் பட்டதாய், அதர்மத்தைத் தர்மமாகக் கருதுவதும், எல்லாப் பொருள்களையும் விபரீதமாகக் காண்பதுமான புத்தி தாமஸம் எனப்படும்.

முதலில் விஷம் போலவும் முடிவில் அமிர்தம் போன்றும் எது ஆகிறதோ அந்த இன்பம் சாத்துவிக மாகும். அது ஆத்மாவில் நிலைபெற்ற புத்தியின் தெளிவிலே தோன்றுகிறது.

○

விஷயங்களிலே புலன்களைப் பொருத்துவதனுல், தொடக்கத்தில் அமிர்தம் போன்றிருந்து முடிவில் விஷம் போல் ஆகும் இன்பம் ராஜஸம் எனப்படும்.

○

தொடக்கத்திலும் இறுதியிலும் ஆத்மாவுக்கு மயக்கம் விளைவிப்பதாய் உறக்கம், சோம்பல், தடுமாற்றத்திலிருந்து பிறக்கும் இன்பம் தாமஸம் எனப்படும்.

○

உயிர்களுக்கெல்லாம் பிறப்பிடமாய். இவ்வையக மனைத்திலும் நிறைந்திருக்கும் கடவுளைத் தனக்குரிய கர்மத்தால் பூஜை செய்யும் மனிதன் ஈடேறுகிருன்.

பிறருக்குரிய தர்மத்தை நன்கு செய்வதைக் காட்டிலும், தனக்குரிய தர்மத்தைக் குணமின்றிச் செய்தலும் நன்று. இயற்கையில் ஏற்பட்ட தொழிலைச் செய்வதனால் ஒருவன் பாவம் அடையமாட்டான்.

○

இயல்பான தொழில் குறையுடையதாயினும், அதைக் கைவிடலாகாது. தீயைப் புகை சூழ்ந்திருப்பது போல் எல்லாத் தொழில்களையும் குறைகள் சூழ்ந்தே நிற்கின்றன.

CONNEMARA PUBLIC LIBRARY
22 APR 1957
MADRAS